# வெடியரசன் கதை: புனைவும் வரலாறும்

**கலாநிதி சின்னத்தம்பி சந்திரசேகரம்**

கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
santhirasegaramsinnathamby@yahoo.com

வெடியரசன் கதை யாழ்ப்பாண முக்குவர் மத்தியில் நீண்டகாலமிருந்து வழங்கிவருகின்ற கதையாகும். முக்குவர்கள் வெடியரசனை முக்குவர் குலத் தலைவனாகவும் தம்மை அவனது வழித்தோன்றல்களாகவும் கருதுகிறார்கள். முக்குவர்கள் யாழ்ப்பாணச் சமூக அடுக்கமைவில் இடைநிலையினராக மதிக்கப்பட்டு வந்த சூழலில் தமது வரலாற்றுப் பெருமையினை வெளிப்படுத்தி அதனூடாக தம் சமூக அந்தஸ்தை நிலைநிறுத்த முனைந்தமையின் வெளிப்பாடாகவே வெடியரசன் கதை அமைந்துள்ளது. வெடியரசன் புனைவு யாழ்ப்பாணத்திலே வாய்மொழிக் கதை, கூத்து, கண்ணகி வழக்குரை ஆகிய கலை இலக்கியங்களிலே சிற்சில மாற்றங்களோடு புனையப்பட்டுள்ளபோதும் கண்ணகி வழக்குரையில் இடம்பெறும் கதையே பிரதானமானதாக அமைகின்றது. கண்ணகி வழக்குரையின் கடலோட்டு காதையில் கண்ணகிக்குக் காற்சிலம்பு செய்வதற்காக நாகமணி பெறுவதற்கு வரும் மீகாமனுக்கும் இலங்கை மன்னன் வெடியரசனுக்கும் இடையிலான போரும் நாகமணி பெறுவதும் சித்திரிக்கப்படுகின்றது. இங்கு வெடியரசனதும் அவனது தம்பியரதும் வீரமும் புகழும் பலபடப் புகழ்ந்துரைக்கப்படுவதும் அதற்குப் பெரும் பகுதி ஒதுக்கப்பட்டுள்ளதும் இந்த நூல் முக்குவ சாதிக் குழுமத்தின் வீர வரலாற்றுப் பெருமையை முன்னிறுத்துவதை இலக்காகக் கொண்டிருப்பதைப் புலப்படுத்துகின்றது. அதேவேளை சாதிய முரண்பாடுகளும் இந்தப் புனைவுக்குள் தொக்குநிற்பதாகத் தெரிகின்றது. அதாவது முக்குவர் x பரதவர் முரண்நிலை வெடியரசன் x மீகாமன் முரணாகச் சித்திரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகின்றது. இங்கு வெடியரசன் முக்குவகுல முன்னோனாகக் காட்டப்பட மீகாமன் பரதவர் குலத் தலைவனாகவும் அவனது படைகள் பரதவர் படைகளாகவும் காட்டப்படுகின்றது. எனவே இலங்கைத் தமிழரிடையே காணப்படும் ஒரு சமுதாயப் பிரிவினரின் வரலாற்றுச் சிறப்பை மேன்மைப்படுத்திக் காட்டுவதற்கான அரசியலாகவே வெடியரசன் கதையின் உருவாக்கமும் இடம்பெற்றுள்ளது. அத்தோடு கண்ணகி வழிபாட்டை தமது குழுமம் சார்ந்ததாகக் கட்டமைப்பதும் இக்கதையிணைப்பின் அரசியலாக அமைந்துள்ளது. அதேவேளை கண்ணகி வழக்குரையின் பிரதியாக்கங்களாகக் கருதப்படுகின்ற கோவலனார் கதை, சிலம்புகூறல் ஆகியவற்றிலே இடம்பெற்றுள்ள வெடியரசன், மீகாமன் பற்றிய கதையிலே ஏற்பட்டுள்ள மாற்றங்கள் கண்ணகி வழக்குரையை எல்லாக் குழுமங்களுக்குமுரிய பொது வழிபாட்டுப் பாடலாக திட்டமிட்டு மறு உருவாக்கம் செய்ததைக் காட்டுகின்றன. மேலும், கண்ணகி வழக்குரை முதலான இலக்கியங்களில் இடம்பெறுகின்ற வெடியரசன் பற்றிய புனைவானது கண்ணகி வழிபாட்டுடன் நாக வழிபாட்டை இணைக்கின்ற முயற்சியாகவும் உள்ளது. அதேவேளை கோவலனார் கதை, சிலம்புகூறல் ஆகிய இரு படைப்புகளிலும் வரும் கடலோட்டுகாதையின் இறுதியிலே வெடியரசனும் அவனது தம்பி விளங்குதேவனும் போரின் பின் மட்டக்களப்புக்குச் சென்று காடுவெட்டி வயல்கள் உண்டாக்கி, குளங்கள் திருத்தி பயிர்கள் செய்து அரசுசெய்து இருந்ததாகப் பாடப்படுகின்றது. இது யாழ்ப்பாண முக்குவ குழுமத்தினரின் மட்டக்களப்புத் தொடர்பு மற்றும் இடப்பெயர்வைச் சுட்டுவதாகவே உள்ளது. மட்டக்களப்பில் கண்ணகி வழக்குரை கண்ணகி வழிபாட்டிலே முக்கிய கூறாக மாறியுள்ளபோதும் வெடியரசன் கதை இங்கு சாதிய உணர்வுடன் பார்க்கப்படுவதில்லை. ஏனெனில் இங்குள்ள முக்குவர் சமூக அதிகாரத்தில் மேலடுக்கில் இருந்த நிலையில் சாதிய இருப்புப் பற்றிப் பேசவேண்டிய தேவை இருக்கவில்லை. எனவே வெடியரசன் கதை யாழ்ப்பாண முக்குவ சமூகத்தவரின் சமூகத் தேவையின் நிமித்தமே உருவாக்கப்பட்டுள்ளது.

**திறவுச் சொற்கள்:** அடுக்கமைவு, முரண்நிலை, மறு உருவாக்கம், புனைவு, முக்குவர்.

## அறிமுகம்:

வெடியரசன் கதை யாழ்ப்பாண முக்குவர் மத்தியில் நீண்டகாலமிருந்து வழங்கிவருகின்ற கதையாகும். முக்குவர்கள் வெடியரசனை தமது குலத் தலைவனாகவும் தம்மை அவனது வழித்தோன்றல்களாகவும் கருதுகிறார்கள். இலங்கைத் தமிழரிடையே காணப்படும் ஒரு சமுதாயப் பிரிவினரான முக்குகரிடையே வழங்கிவரும் நாட்டார் பாடல்களை அடிப்படையாகக் கொண்டு அமைவதே வெடியரசன் வரலாறு என்று பேராசிரியர் பத்மநாதன் கூறுகிறார் (மதிப்புரை,1988). வடஇலங்கையிலும் கிழக்கிலங்கையிலும் கரையோரப் பகுதிகளிலே வாழ்ந்த தமிழ் மக்களிடையே வெடியரசன் கதை நெடுங்காலமாகச் செல்வாக்குப் பெற்றிருந்ததாகவும் அக்கதை மக்கள் நிலைப்பட்ட ஒரு கதை எனவும் அவர் மேலும் கூறுவார் (1988: 6).



ISBN 978-955-627-120-1

**முறையியல்:**

இந்த ஆய்வு சமூகவியல் நோக்கின் அடிப்படையிலே மேற்கொள்ளப்படுகின்றது.

**ஆய்வு:**

முக்குவர்கள் யாழ்ப்பாணச் சமூக அடுக்கமைவில் இடைநிலையினராக மதிக்கப்பட்டு வந்த சூழலில் தமது வரலாற்றுப் பெருமையினை வெளிப்படுத்தி அதனூடாக தம் சமூக அந்தஸ்தை நிலைநிறுத்த முனைந்தமையின் வெளிப்பாடாகவே வெடியரசன் கதை அமைந்துள்ளது. எனவே இந்தப் புனைவினுள்ளே சாதிய உணர்வுகள் வலுவாக இயங்கியுள்ளதைக் காணமுடிகின்றது.

வெடியரசன் கதை கண்ணகி வழக்குரை- கடலோட்டு காதையில் 377 பாடல்களில் விரிவாகப் பேசப்படுகின்றது. அதேவேளை இக்கதை யாழ்ப்பாணத்திலே வாய்மொழிக் கதையாகவும், கூத்தாகவும் பயிலப்பட்டு வருகின்றது. ஆயினும் இக்கதைகள் இவற்றில் சிற்சில மாற்றங்களோடு புனையப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

வெடியரசன் நயினாதீவை இராசதானியாகக் கொண்டு நெடுந்தீவில் கோட்டை அமைத்து அரசாண்டான் என்றும் அவன் வைத்திருந்த நாகரத்தினத்தைக் கண்ணகியின் திருமணத்தின் பொருட்டுக் கவர்வதற்காக மீகாமன் என்பவன் அனுப்பப்பட்டான் என்றும் அவன் வெடியரசனின் தம்பியரை இரந்து கேட்டு நாகரத்தினத்தைப் பெற்றுச் சென்றான் என்றும் குறிப்பிட்ட வாய்மொழிக் கதை கூறுகின்றது (பார்க்க: விசாகரூபன்,கி.,2009:145-46).

யாழ்ப்பான முக்குவ சமூகத்துக்குரிய கூத்தாகிய வெடியரசன் கூத்தின் கதை பின்வருமாறு அமைகின்றது: கண்ணகிக்குச் சிலம்பு செய்ய நாகரெத்தினம் கேட்டு இலங்கையை ஆட்சி செய்யும் வெடியரசனிடம் சோழ சேனாதிபதி மீகாமனை அனுப்புகின்றனர். மீகாமன் வெடியரசனிடம் நாகரெத்தினத்தைக் கேட்க வெகுண்டெழுந்து போர் செய்கிறான். மீகாமன் வெடியரசனைச் சிறைப்பிடிக்கிறான். பின் வெடியரசனின் தம்பி வீரநாரணன் மீகாமனுடன் போரிட்டு மீகாமனைவெட்டுகிறான். ஆனால் மீகாமன் கண்ணகி அருளால் எழுந்து வீரநாரணனைக் கொல்கிறான். வெடியரசனின் ஏனைய தம்பியரான விளங்குதேவன், போர்வீரகண்டன், ஏரிலங்குரூபன் ஆகியோர் மீகாமனை எதிர்த்துச் சண்டையிட்டு மீகாமனைப் பிடித்து வெடியரசனின் முன்னே நிறுத்துகின்றனர். முடிவில் வெடியரசன் மீகாமனை மன்னித்து நாகரெத்தினத்தைக் கொடுத்து அனுப்புகிறான் (காரை சுந்தரம்பிள்ளை,200).

இரண்டு கதைகளும் இறுதியில் வெடியரசனின் வெற்றியைக் காட்டுகின்றன. கண்ணகி வழக்குரை வெடியரசன் கூத்துக் கதையைப் பெருமளவு ஒத்திருப்பினும் இறுதியில் மீகாமன் வெற்றிபெற்று நாகமணியைக் கொண்டுசெல்வதாக வருகின்றது.

யுாழ்ப்பாண ஆரியச்சக்கரவர்த்திகள் காலத்தில் (கி.பி.1216-1621) பாடப்பட்டதாகக் கொள்ளப்படும் கண்ணகி வழக்குரையில் வெடியரசனின் கதை முக்குவரின் உற்பத்தி பற்றிய ஐதீகப் புனைவொன்றிலிருந்து தொடங்குகின்றது. அதாவது, திருமால் பாற்கடலில் பள்ளிகொள்ளும் பொழுது தனது கையிலிருந்த சங்கு நழுவிக் கடலில் விழவும் அதனைத் தேடிப் பெற்றுத்தருமாறு அவர் பிரமனைப் பணித்தார். பிரமன் தனக்கு இயலாமையால் மனிதன் ஒருவனைத் தன் தொடையிலிருந்து படைத்தார். அவன் சங்கை ஆழ்கடலில் தேடிப் பெற்றுக்கொடுத்தான். அதனால் சங்கு, சக்கரம், அன்னக்கொடி என்பவற்றை அவன் வரிசையாகப் பெற்றான். அவன் வழிமுறையில் வருபவரே முக்குவர் என்பது அக்கதையாகும். இக்கதை மட்டக்களப்பு முக்குவரின் உற்பத்தி பற்றிய ஐதீகங்களைக் கூறும் கல்வெட்டின் ஏட்டுப் பிரதிகளிலும் உண்டு (பத்மநாதன்,சி.,2002:249).

.பிறந்துமுன்னே தொழுதுநிற்கப் பெருமாளும் என்சொலுவார்
மறந்துவந்தோம் வலம்புரியை வாரியிலே நீர் போகி
அறிந்தபடி முக்குளித்து அதனைஇங்கே தருவதென்ன
சிறந்தவன்போய் எடுத்துவந்து திருமுன்னே வைத்துநின்றான் (பா.4)

என்று கடலோட்டு காதையின் ஆரம்பம் திருமாலின் சங்கைத் தேடிப் பெற்ற கதையோடு தொடங்குகின்றது. சங்கைக் கொடுக்கவும் திருமால் அவனுக்கு உனது பெயர் 'முக்கியன்' எனக் கூறி, வரங்களும் கொடுக்கின்றார். இதனை அடுத்துவருகின்ற பாடல்:

'கொடுத்தவரம் பெற்றுடைய குலவுபுகழ் முக்கியர்கோன்
வெடித்தபுன்னைத் தாருடையான் வெடியரசன் தேவியவள்…'



ISBN 978-955-627-120-1

என்று திருமாலிடமிருந்து வரங்கள் பெற்ற புகழ் பெற்ற முக்குகர்களின் அரசன் வெடியரசன் என்று வெடியரசன் அறிமுகம் செய்யப்படுகின்றான். இப்பகுதியில் அவன் கடலுக்கு அரசனாகச் சித்திரிக்கப்படுகின்றான. அதேவேளை பல்வேறு இடங்களிலும் வெடியரசனும் அவனது தம்பியரும், அவர்களது படைகளும் குகன் குலத்தினர் என்று சிறப்பிக்கப்படுவதையும் காணலாம்.

கண்ணகி வழக்குரையில் மீகாமன் கண்ணகியின் பிரதிநிதி என்ற அடிப்படையில் அவனது வீரத்துக்குப் பெரும் இழுக்கு ஏற்பட்டுவிடாத வண்ணம் ஆசிரியர் கதையை நகர்த்தும் அதேவேளை வெடியரசனைக் கதாநாயகனாகச் சித்திரிக்கின்றார். வெடியரசனதும் அவனது தம்பியரதும் வீரமும் போராற்றலும் நூலில் பரந்து காணப்படுகின்றன. வெடியரசனின் ஆட்சிப்பரப்பு, கோட்டை, படை வலிமை, வீரதீரச் செயல்கள் முதலான விடயங்கள் பலபட விபரிக்கப்படுகின்றன.

‘தோன்றுமிந்தக் கனகிரிமேற் துய்யநவ ரெத்தினமும்
வான்றோயும் மண்டபமும் மாஞ்சோலைப் பூங்காவும்
என்றபெருங் கோட்டைகளும் இரண்டருகு கிடங்குகளும்
மூன்றுலகும் புகழ்படைத்த முக்கியர் தன் பதிபாராய்’ (பா.48)

என்று முக்குவரின் பிரதேசச் சிறப்பும் அக்குழுமத்தினரது புகழும் விதந்து பாடப்படுகின்றது.

கடலரசனுக்கும் மீகாமனுக்கம் இடையே நடந்த போரிலே இறுதிக் கட்டத்திலே வெடியரசன் படைக்குத் தோற்கும் நிலை ஏற்பட்டபோது தன் குலப்பெருமை காப்பதற்காக உயிரையும் விடத் துணிந்து போரிடும் வீரனாக அவன் காட்டப்படுகிறான். இது இராமாயணப் போரை நினைவுபடுத்துகிறது. அவனுக்கு ஏற்பட்ட தோல்வியும் மீகாமனின் தவறான போரின் விளைவால் ஏற்பட்டதாகவே காட்டப்படுகின்றது.

‘…வீரமுள்ள செருச்சிங்கமே வெடியரசே யென்கணவா
நேராகப் போர்செயாமல் நெட்டூரஞ் செய்தானே
பாரிலிது திறலோவென்று பரிதவித்தங் கேயழுதாள் (பா.124)

இப்பாடல் வெடியரசனின் மனைவியின் புலம்பலாக வருகின்றது. அதுபோலவே அவனது தம்பி வீரநாரணனுக்கும் மீகாமனுக்கும் இடையிலே நடந்த சண்டையில் இறுதியில் வீரநாரணனின் வீரத்துக்கு ஆற்றாமல் மீகாமன் தோற்கிறான். ஆனால் கண்ணகியின் அருளை வேண்டிக்கொண்டு வேலெடுத்து எறிய வீரநாரணன் இறக்கிறான்.

பட்டவேல் தனைப்பிடித்துப் பார்த்துவீர நாரணனும்
வெட்டியெதிர் பொருவோமென்று மீகாமா வந்தெதிர்த்துத்
தொட்டெதிரே போர்செய்யாமற் சோராயஞ் செய்துகொண்டாய்’(மணிவாங்கின கதை,பா.257)

என்று தவறான வழியிலான மீகாமனின் வெற்றியை வீரநாரணன் பழிக்கிறான். இறுதியிலே வெடியரசனின் அடுத்த தம்பியான விளங்குதேவனுக்கும் மீகாமனுக்குமிடையில் கடும்போர் இடம்பெற்றபோது அந்தப் போரை நிறுத்தி சமாதானத்தை ஏற்படுத்துகின்ற உத்தம வீரனாகவும் வெடியரசன் சித்திரிக்கப்படுகின்றான்.

இவ்வாறாக வெடியரசனதும் அவனது தம்பியரதும் வீரமும் புகழும் பலபடப் புகழ்ந்துரைக்கப்படுவதும் அதற்குப் பெரும் பகுதி ஒதுக்கப்பட்டுள்ளதும் இந்த நூல் முக்குவ சாதிக் குழுமத்தின் வீர வரலாற்றுப் பெருமையை முன்னிறுத்துவதை இலக்காகக் கொண்டிருப்பதைப் புலப்படுத்துகின்றது. எவ்வாறாயினும் இந்த இரு ஐதீகங்களும் முக்குவரின் வாழ்க்கை, தொழில் கடலோடு சம்பந்தப்பட்டது என்பதைச் சுட்டிநிற்கின்றன.

அதேவேளை சாதிய முரண்பாடுகளும் இந்தப் புனைவுக்குள் தொக்குநிற்பதாகத் தெரிகின்றது. அதாவது முக்குவர் x பரதவர் முரண்நிலை வெடியரசன் x மீகாமன் முரணாகச் சித்திரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகின்றது. இங்கு வெடியரசன் முக்குவகுல முன்னோனாகக் காட்டப்பட மீகாமன் பரதவர் குலத் தலைவனாகவும் அவனது படைகள் பரதவர் படைகளாகவும் காட்டப்படுகின்றது. மேல்வரும் பாடலடிகள் இதனைக் காட்டுகின்றன.

‘கோத்திர மாகிய பரதவர் தம்முடன்
கூறம ரக்கல மானதெல்லாம்
சேர்த்திணி யாக வகைப்பட முக்கியர்
சேனைதிடுக்கிட வெட்டினரே (மணிவாங்கின கதை,பா.240)



ISBN 978-955-627-120-1

வடஇலங்கையில் முக்குகர் செல்வாக்குப் பெற்றிருந்தபோது கண்ணகி வழிபாடு செய்யும் பாண்டிய கரையார் வட இலங்கையில் குடியேறினர். இதனால் இவ்விரு இனங்களுக்கிடையே மனக்கசப்பு உருவானது. இதனைக் காட்டுவதே வழக்குரை காவியம் கூறும் மீகாமன் வெடியரசன் போர் எனலாம் என்று பேராசிரியர் சண்முகசுந்தரம் குறிப்பிடுவது (2011:211) இவ்விடத்தில் சுட்டிக்காட்டத்தக்கது.

வெடியரசன் பற்றிய புனைவுப் படைப்புகளினுள்ளே சாதிய முரண்கள் செயற்பட்டுள்ளன என்பதற்கு மற்றுமொரு எடுத்துக்காட்டு வெடியரசன் கூத்து, மீகாமன் கூத்து ஆகிய கூத்துகள் தொடர்பாக முக்குவருக்கும் திமிலருக்கும் இடையே ஏற்பட்ட சாதிச் சண்டையாகும். முக்குவர் சமூகத்தவரால் ஆடப்பட்ட வெடியரசன் கூத்து வெடியரசனை முக்குவ குல அரசனாக, வீரனாகக் காட்டியது. ஆனால் திமிலரால் ஆடப்பட்ட மீகாமன் கூத்து மாறாக வெடியரசனைத் தாழ்ந்த பாத்திரமாகக் காட்டியது. இதன் காரணமாக இரு சமுகத்தினருக்குமிடையில் சாதிச் சண்டை ஏற்பட்டு அதன் விளைவாக நீதிமன்றம் 1930 இல் இவ்விரு கூத்துக்களையும் தடைசெய்தது (காரை சுந்தரம்பிள்ளை, 318).

எனவே இலங்கைத் தமிழரிடையே காணப்படும் ஒரு சமுதாயப் பிரிவினரின் வரலாற்றுச் சிறப்பை மேன்மைப்படுத்திக் காட்டுவதற்கான அரசியலாகவே வெடியரசன் கதையின் உருவாக்கமும் இடம்பொற்றுள்ளது. அத்தோடு கண்ணகி வழிபாட்டை தமது குழுமம் சார்ந்ததாகக் கட்டமைப்பதும் இக்கதையிணைப்பின் அரசியலாக அமைந்துள்ளது.

தமிழரின் அரசியலாதிக்கமும் பண்பாட்டு மரபுகளும் உன்னத நிலையில் விளங்கிய ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்தில் வரலாற்றுணர்வுடன் கூடிய நூல்களின் உருவாக்கம் முனைப்புப் பெற்றது. குறிப்பிட்ட ஒரு சமூகத்தினர் தமது சமூகநிலைப்பாடு பற்றியும் அதன் புவியற் களம் பற்றியும் சிந்திக்கத் தொடங்கும் பொழுது வரலாற்றணர்வு எற்படுகின்றது. அதாவது தம்மை நிலையான குழுவினராகக் கொள்ளும் பிரக்ஞை ஏற்படும்பொழுதுதான் வரலாறு தோன்றும். இத்தகைய சூழ்நிலையில் தோன்றும் நூல்கள் மதநம்பிக்கைப் போர்வைக்குள் வரலாற்றைத் திணித்துக் கூறுவது ஒரு மரபாகும் (சிவத்தம்பி,கா.,2010:16). இவ்வாறானதொரு சூழலிலேயே முக்குவர் குழுமத்தின் மத்தியில் ஏற்பட்ட வரலாற்றுப் பிரக்ஞை கண்ணகியைத் தெய்வநிலைப்படுத்தி உருவான கண்ணகி வழக்குரையினுள்ளே தமது வரலாற்றுப் பெருமையைப் பேசவைத்துள்ளது.

அதேவேளை கண்ணகி வழக்குரையின் பிரதியாக்கங்களாகக் கருதப்படுகின்ற கோவலனார் கதை, சிலம்புகூறல் ஆகியவற்றிலே இடம்பெற்றுள்ள வெடியரசன், மீகாமன் பற்றிய கதையிலே ஏற்பட்டுள்ள மாற்றங்களை நோக்குமிடத்து இந்த இரு இலக்கியங்களும் எல்லாக் குழுமங்களும் கண்ணகி வழிபாட்டிலே பயில்கின்ற ஒரு பொதுப்பாடலாக கண்ணகி வழக்குரை மாறிய ஒரு சூழலில் படியெடுக்கப்பட்டவை போல் தெரிகின்றது. இன்னொருவகையில் கூறின், கண்ணகி வழக்குரையை எல்லாக் குழுமங்களுக்குமுரிய பொது வழிபாட்டுப் பாடலாக திட்டமிட்டு மறு உருவாக்கம் செய்தது போல் தெரிகின்றது. இதற்கு ஒரு எடுத்துக்காட்டு கடலோட்டுகாதையின் ஆரம்பமாக அமைகின்ற முக்குகரின் உற்பத்தி பற்றிய இரு புனைவுகளும் இவ்விரு ஆக்கங்களிலும் இடம்பெறாமையாகும். அடுத்தது, இக்காதையிலே மீகாமன் முன்னுரிமைப்படுத்தப்பட்டுள்ளமை தெரிகின்றது. எடுத்துக்காட்டாக, மீகாமன் நாகமணியைப் பெற நாகராசாவிடம் சென்றபோது அவனை பாம்புகள் சுற்றிப் பிடிக்கவும் கண்ணகியை நினைந்து வணங்குவதும் கண்ணகி தோன்றி அவனுக்கு அருள் புரிவதும் பற்றிய விபரிப்புகள், அவ்வாறே, வீரநாரணன் முன் தோற்றபோது கண்ணகியை நினைந்து வேண்டுதல் செய்தல், கண்ணகிதோன்றி அருளும் வாளும் கொடுத்தல் பற்றிய விபரிப்புகள், வீரநாரணன் இறக்கவும் வெடியரசன் துயருற்றபோது மீகாமன் அவனுக்கு மதியுரைத்தல், ஆறுதல் படுத்துதல் என்பவற்றின் ஊடாக அவனது நற்குணங்களை விபரிப்பது, நாகமணியை மானாகரிடம் கொடுத்தபோது அவர் அவனுக்குச் செய்யும் சிறப்புக்கள், அவனது பெருமைகள் பற்றிய விபரிப்புக்கள் முதலானவையெல்லாம் கண்ணகி வழக்குரையில் இடம்பெறாதவை; அவனுக்கு முன்னுரிமை கொடுப்பவை.

மற்றும், கண்ணகி வழக்குரை முதலான இலக்கியங்களில் இடம்பெறுகின்ற வெடியரசன் பற்றிய ஐதீகப் புனைவானது கண்ணகி வழிபாட்டுடன் நாக வழிபாட்டை இணைக்கின்ற முயற்சியாகவும் உள்ளது. ஈழத்துக் கண்ணகி அம்மன் சடங்குகளிலே காற்சிலம்பு பூசைக்குரிய ஒரு புனிதப் பொருளாகக் கொள்ளப்பட்டு வருகின்றது. நாகமணியானது தமிழ்ப் பண்பாட்டில் அச்சத்துக்குரிய, தெய்வீகத் தன்மையுடைய ஒன்றாகக் கொள்ளப்படுகின்றது. எனவே கண்ணகியின் காற்சிலம்பு நாகமணியைக் கொண்டு அமைப்பதாகப் புனைவதன் ஊடாக அச்சிலம்பின் தெய்வீகப் பண்பினை உயர்த்துவதை அடிப்படையாகக் கொண்டே இப்புனைவு உருவாக்கப்பட்டுள்ளது. அதற்கும் மேலாக, நாக வணக்கத்தை கண்ணகி வணக்கத்துடன் இணைப்புச் செய்கின்ற நோக்கும் இங்கு செயற்பட்டுள்ளது. தமிழகத்திலும் கேரளத்திலும் உருவான கண்ணகி கதைப்பாடல்களை நோக்கின் அவை பெரும்பாலும் கண்ணகியை காளியின் அல்லது துர்க்கையின் அம்சமாகவே காட்டுகின்றன. இதனூடாக அவை கண்ணகியை அச்சத்துக்குரிய தெய்வமாகக் காட்டுகின்றன. அவ்வாறே ஈழத்திலே உருவான கண்ணகி இலக்கியங்களும் கண்ணகியை காளியினதும் துர்க்கையினதும் அம்சமாக்



ISBN 978-955-627-120-1

காட்டுகின்ற அதேவேளை நாகத்துடனும் இணைப்பதனூடாக அச்சத்துக்குரிய தெய்வத் தன்மையை மேலும் வலுப்படுத்த முனைந்துள்ளன. இந்த இணைப்புக்கு ஈழத்திலே தமிழர் மத்தியில் நிலைபெற்றிருந்த நாகவணக்கம் அடிப்படையாக இருந்திருக்க வேண்டும். ஆரியச்சக்கரவர்த்திகள் காலத்திலே நாகவணக்கம் இடம்பெற்றமை பற்றி பேராசிரியர் சி.பத்மநாதன் கூறியுள்ளமை இவ்விடத்தில் நினைவுகொள்ளத்தக்கது. ஈழத்தில் முற்காலங்களில் நாக இன மக்கள் வாழ்ந்து வந்தமை பற்றியும் அவர்களது நாக வணக்கம் பற்றியும் ஆய்வுகள் வெளிப்படுத்துகின்றன. எனவே இந்த நாக வணக்கத்தின் செல்வாக்கு ஆரியச்சக்கரவர்த்திகள் காலத்திலும் செல்வாக்குற்றிருந்த சூழலில் இந்த இணைப்பு இடம்பெற்றிருக்க வேண்டும்.

அத்துடன் நாக இனத்தவரின் வழித்தோன்றல்களாக முக்குவரைக் கருதுகின்ற கர்ணபரம்பரைக் கதைகள் உள்ளன. நாகர்களில் ஒரு பகுதியினரான முகுளிநாகர்களே முத்துக்குளித்தனராகையால் முற்குகர் எனப்பட்டனர் என்று அவை கூறுகின்றன (சிவப்பிரகாசம்,மு.சு., 1988: 40). எனவே முக்குவ குழுமத்தின் மத்தியிலிருந்து கண்ணகி வழக்குரை முதலான படைப்புகள் உருவானபோது கண்ணகியை நாகவழிபாட்டுடன் இணைக்க முனைந்துள்ளனர். இதனூடாகத் தமது குலப்பெருமையை நிலைநிறுத்த விளைந்துள்ளனர் எனலாம். கண்ணகி வழக்குரை - மணிவாங்கின கதையில் மீகாமன் ஊடாக நாக வணக்கம் விபரிக்கப்படுவதைக் காணலாம்.

அதேவேளை கோவலனார் கதை, சிலம்புகூறல் ஆகிய இரு படைப்புகளிலும் வரும் கடலோட்டுகாதையின் இறுதியிலே வெடியரசனும் அவனது தம்பி விளங்குதேவனும் மீகாமனுடன் ஏற்பட்ட போரின் பின் தமது ஊர் வந்து தமது கப்பல்களையெல்லாம் விற்றுவிட்டு மட்டக்களப்புக்குச் சென்று காடுவெட்டி வயல்கள் உண்டாக்கி, குளங்கள் திருத்தி பயிர்கள் செய்து அரசுசெய்து இருந்ததாகப் பாடப்படுகின்றது. இது மட்டக்களப்பு முக்குகரை யாழ்ப்பாண முக்குவரின் தோன்றல்களாகக் காட்ட முற்படினும் இதற்கான தக்க வரலாற்றுச் சான்றுகள் கிடைக்கவில்லை. எவ்வாறாயினும் மேற்படி தகவல் யாழ்ப்பாண முக்குவ குழுமத்தினரின் மட்டக்களப்புத் தொடர்பைச் சுட்டிப்பாகக் காட்டுகின்றது. அதேவேளை கண்ணகி வழக்குரையில் இந்த விடயம் இடம்பெறவில்லை என்பதும் இவ்விடத்தில் கவனத்திற்குரியது.

வடபுலத்திலே ஆரியச் சக்கரவர்த்திகளின் ஆட்சி இடம்பெற்ற காலத்தில் மட்டக்களப்பில் மாகோனின் ஆட்சி (கி.பி.1216 – 1621) இடம்பெற்றது. இக்காலத்திலே மலையாள தேசத்து முக்குவர் சாதிக் குழுமம் மேலோங்கிய செல்வாக்கினைப் பெற்றிருந்தது. அவர்களே அதிக நிலவுடைமையாளராகவும் விளங்கினர்.

மாகோனுடைய ஆட்சிக் காலத்தில் மலையாள தேசத்து முக்குவர் உயர் பதவிகளையும் நிலமானியங்களையும் பெற்றனர். ஆட்சி முறை, சமூக வளமைகள் என்பவற்றில் அவர்களின் செல்வாக்கு மேலோங்கியது. இதன் காரணமாக மருமக்கள் தாயமுறையினை அடிப்படையாகக் கொண்ட முக்குவர் வளமை தேசத்து வளமையாக அழுத்தம் பெற்றது… இக்காலத்தில் மலையாள முக்குவரின் படைத்தலைவர் சிலர் வன்னிமைப் பதவியைப் பெற்றனர் என்ற கருத்து மட்டக்களப்புப் பூர்வ சரித்திரத்தின் மூலமாக அழுத்தம் பெறுகின்றது (பத்மநாதன்,சி., 2002:216 – 17).

யாழ்ப்பாண இராச்சியம் நிலைபெற்றிருந்த காலத்தில் அதற்கு வெளியே மட்டக்களப்பு, மண்முனை, பழுகாமம், போரதீவு, கோறளைப்பற்று, நாடுகாடு முதலான பல கிழக்கிலங்கைத் தமிழ் வன்னிமைகள் சிறப்புற்றிருந்தன. இந்த வன்னிமைகளுக்கும் யாழ்ப்பாண இராச்சியத்துக்குமிடையே கடல் வழியாகவும் தரைவழியாகவும் நெருங்கிய வாணிப, கலாசாரத் தொடர்புகள் ஏற்பட்டிருந்தன. இவ்வமைப்புக்கள் அரசியலின் காரணமாக தனித்தும் வேறுபட்டும் காணப்பட்ட போதும் தமிழ் மொழி வழக்காலும் அதன் இலக்கியப் பாரம்பரியத்தினாலும் சைவ சமய மரபுகளின் பயனாகவும் கண்ணகி வழிபாட்டின் மூலமாகவும் பொதுவான சமய கலாசார பாரம்பரியத்தையும் ஒருமைப்பாட்டையும் பெற்றிருந்தன (பத்மநாதன்,சி.,2004: 312).

முக்குவர் வேளாண்மை நிலவுடைமையாளர்களாக இருந்தமையினாலேயே அவர்களின் முக்கிய தெய்வங்களாக மாரியும் கண்ணகியும் விளங்கின. ஏனெனில் இத்தெய்வங்கள் மழைக்கும் வளத்துக்கும் உரிய தெய்வங்களாகக் கருதப்பட்டன.இவ்வாறு மட்டக்களப்பில் முக்குவர் சமூக, அரசியல், பொரளாதார அடிப்படைகளில் செல்வாக்குள்ளவர்களாகவும் கண்ணகி அம்மன் வணக்கமுறையினைக் கடைப்பிடித்துவந்த நிலையிலும் வடபுல முக்குவரின் தொடர்பு அல்லது குடிப்பரம்பல் மட்டக்களப்பில் ஏற்பட்டிருக்க வேண்டும்.

இந்தத் தொடர்பின் ஒரு வெளிப்பாடே வடபுலத்திலே உருவான கண்ணகி வழக்குரை மட்டக்களப்பிலே கண்ணகி கோயிற் சடங்குகளிலே பாடப்படுகின்ற பாடல்களிலே முதன்மையான பாடலாகச் செல்வாக்குற்றமையாகும். இன்னொரு வகையில் கூறின் கண்ணகி வழக்குரையினுள்ளே



ISBN 978-955-627-120-1

இயங்கிய முக்குவ குழும வரலாற்றுப் பிரக்ஞையே அது மட்டக்களப்பிலே கண்ணகி சடங்கு வழிபாட்டில் முக்கியம் பெறக் காரணமாக இருக்க வேண்டும்.

வடபுலத்தில் கண்ணகி வழிபாட்டின்பொருட்டு முக்குவ குழும பிரக்ஞையின் வழியே உருவான கண்ணகி வழக்குரை தமது உற்பத்தி பற்றி ஒருமித்த கருத்தையும் மற்றும் ஒருமித்த வழிபாட்டையும் கொண்டிருந்தவர்களான மட்டக்களப்பு முக்குவரிடையே பரவுவது என்பது இயல்பாகும்.

சமூகத்தில் அதிகாரத்தில் இருக்கும் குழுமத்தினரின் வழமைகளை ஏனைய குழுமங்களும் பொதுமரபாக ஏற்றுக்கொள்வது நியதி என்ற அடிப்படையில் பின்னர் சாதி கடந்த நிலையில் மட்டக்களப்பில் கண்ணகி வழக்குரை கண்ணகி வழிபாட்டிலே முக்கிய கூறாக மாறியுள்ளது. அதேவேளை கண்ணகி வழக்குரையில் இடம்பெறும் வெடியரசன் கதை இங்கு சாதிய உணர்வுடன் பார்க்கப்படுவதில்லை. அக்கதை கூத்தாகவும் ஆடப்படுவதில்லை. ஏனெனில் மட்டக்களப்பில் முக்குவர் சமூக அதிகாரத்தில் மேலடுக்கில் இருந்த நிலையில் சாதிய உயர்வு/ இருப்புப் பற்றிப் பேசவேண்டிய தேவை அவர்களுக்கு இருக்கவில்லை. அதேவேளை இங்கு கூத்து சாதிய இருப்பை நிலைநிறுத்துவதற்காக ஆடப்படுவதில்லை. மாறாக, விவசாய நிலமானிய பொருளாதார அமைப்பிலே அவர்களின் பொழுதுபோக்குச் சாதனமாகவே அது ஆடப்பட்டுவருகின்றது.

**முடிவுரை:**

ஆகவே வெடியரசன் கதை யாழ்ப்பாண முக்குவ சமூகத்தவரின் சமூகத் தேவையின் நிமிர்த்தமே உருவாக்கப்பட்டுள்ளது. முக்கியமாக தமது வரலாற்றுப் பெருமையினை வெளிப்படுத்தி அதனூடாக தம் சமூக அந்தஸ்தை நிலைநிறுத்த முனைந்தமையின் வெளிப்பாடாகவே வெடியரசன் கதை அமைந்துள்ளது. அதேவேளை சாதிய முரண்பாடுகளும் இந்தப் புனைவினுள்ளே தொக்குநிற்பதும் தெரிகின்றது.

**உசாத்துணை:**

கந்தையா,வி.சீ., (தொகு),1968, கண்ணகி வழக்குரை, காரைதீவு: காரைதீவு இந்துசமய விருத்திச் சங்கம்.

சண்முகசுந்தரம்,சு.,2011,திராவிடத் தெய்வம் கண்ணகி, சென்னை: காவ்யா.

சிவத்தம்பி, கா., 2010, ஈழத்தில் தமிழ் இலக்கியம், கொழும்பு – சென்னை: குமரன் புத்தக, இல்லம்.

சிவப்பிரகாசம்,மு.சு.,1988, விஷ்ணுபுத்திரன் வெடியரசன் வரலாறு, தொல்புரம்: அகில இலங்கை வெடியரசன் கலாமன்றம்

சிவலிங்கராஜா, எஸ்., 2009, ஈழத்துத் தமிழ் இலக்கியச் செல்நெறி, கொழும்பு - சென்னை: குமரன் புத்தக இல்லம்.

சுதாகர்,கு., 2011, கண்ணகி கதைகள், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை.

செல்வராசு, நா., 2013, கண்ணகி தொன்மம் - சமூக மானிடவியல் ஆய்வு, நாகர் கோவில்: காலச்சுவடு பப்பிளிகேஷன்ஸ் (பி) லிட்.

செல்லையா,மா.செ.,(பதி),1962,கோவலனார் கதை, பருத்தித்துறை: கலாபவன அச்சகம்.

நடராசன்,தி.சு.,2015, சிலப்பதிகாரம் மறுவாசிப்பு, சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி)லிட்.

பத்மநாதன்,சி., 2004, ஈழத்து இலக்கியமும் வரலாறும், கொழும்பு – சென்னை: குமரன் புத்தக இல்லம்.

பத்மநாதன்,சி., 2002, கிழக்கிலங்கைத் தமிழர் தேச வழமைகளும் சமூக வழமைகளும், கொழும்பு – சென்னை: குமரன் புத்தக, இல்லம்.

புஸ்பரட்ணம், பரமு, 2006, இலங்கைத் தமிழரும் நாகநாட்டு அரச மரபும், சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.



ISBN 978-955-627-120-1

விசாகரூபன், கி., (தொகு), 2009, ஈழத்துத் தமிழ் நாட்டுப்புறக் கதைகள், யாழ்ப்பாணம்: மலர் பதிப்பகம்.



ISBN 978-955-627-120-1